Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A 9/300] of 1953.

விரோதிஇல (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்துசாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- சுபகிருது ஞூ மாசிமீ கஎ உ வெள்ளிக்கிழமை (1 March. 1963) [இல-சஎ]

## திருக்கோவையார்

—:0:—

[அணிமையில் நடைபெற்ற அ. இ. சைவ மகாநாட்டில் இரண்டாம் நாளன்று கலந்துகொண்ட வித்துவான், சைவப் புலவர், திரு இ திருநாவுக்கரசு அவர்கள் ஆற்றிய உரை]

முற்றொடர்—7

இவ்வாறு கூறக் கேட்டுச் சென்ற பாங்கன் மீண்டு வந்து கண்டமை கூறக் குறி வழிச் சென்று இறைவியைக் கண்டு மீண்ட துரைப்பக் கேட்டு அவ்வியலிடம்சென்று தலைவியைக் கண்டு அவளைத் தன்னுயிரெனவியக்கின்றான்:-

"நேயத்ததாய் நென்னலென்னைப்
புணர்ந்து நெஞ்சம் நெகப்போய்
ஆயத்ததாய் அமிழ்தாய்
அணங்காய் அரன் அம்பலம்
போல்
தேயத்ததாய் எந்தன் சிந்தைய
தாய்த் தெரியிற் பெரிதும்
மாயத்ததாகி இதோவந்து நின்ற
திம் மன்னுயிரே"

என்னுயிர்க்கினிய அன்பாகி நேற்றை இயற்கைப் புணர்ச்சியில் என்னை (குருந்தமரநீழலில்) புணர்ந்து என்னுள்ளத்தை நெகிழ்வித்து (மெய்படியார்கூட்டமாகிய) ஆய வெள்ளமாகிய சுற்றத்து நடுவே விளங்கி என்னுயிர் தளிர்ப்பத்தோன்றலால் அமிழ்தாய்- என்னைப் பிரிதலின் வருத்தம் தருவதான் - சின்மயானந்த சொரூபமான கனகசபை போல் ஒளியுடைத்தாகினும் என்னுள்ளக் கோவிலிலும் காணக்கூடியதாய் நன்கு சிந்திக்கும்போது இஃதோர்மாய வித்தையாகி இதோ என்னுயிரினுமினியாள் வந்து நிற்கின்றாள் இவ்வற்புதத்தைக்,

"கேட்டாயோ தோழி
கிளிசெய்த வாறொருவன்
தோட்டார் மதில்புடைசூழ்
தென்னன் வருந்துறையான்
காட்டாதன வெல்லாங்
காட்டிச் சிவங்காட்டித்
தாட்டாமரை காட்டித
தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய
நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா
பாடுதுங்காண் அம்மானாய்,"

என அம்மானைப்பத்தில் தலைவி தோழியருடன் அம்மானையாடிச் சொல்லிய பாணியில் தன்னின்பத்தை வெளிப்படுத்துகிறார்.

இவ்வாற பாங்கனாற்கூடும் கூட்டம் எய்திய தலைவியின் மெய்ப்பாட்டின் திறங்கண்டு ஐயுற்றதோழி தலைவி இருவரும் உறையுர்போது அவன் வரவு கண்டு அவருள்ளத்துக் கரந்து மிளிரும் அன்பின் நவரசத்தைக் காண்கின்றாள்.

"கண்ணினும் செவியினுப் நுண்ணிதினுணரும், உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின், நன்னயப் பொருள் கோள் எண்ணருங்குணத்தே"

என்ற தொல்காப்பிய சூத்திரத்தின்படி "மனோதத்துவ சாஸ்திரத்தில் (Psycology) வல்லதோழி அவர்களை நோக்கித் தம் மதியை உடன்படுத்துகிறார்.

காகத்திரு கண்ணிற் கொன்றே
மணி கலந்தால் இருவர்
ஆகத்துளோருயிர் கண்டமையாள்
இன்றி யாவையுமாய்
ஏகத்தொருவன் குரும்பொழி
லம்பலவன் மலையில்
தோகைக்கும் தோன்றற்கும்
ஒன்றாய் வருமின்ப
துன்பங்களே

காகத்திற் கிருகண்கள் உள. ஆனால் அவற்றுள் மிளிரும் வெளித்தோற்றத்தில் கண்ணின் மணி ஒன்றே பார்வைக்கு இரண்டுபோற் தோன்றினும் நோக்குஒன்றே. அஃதேபோல தலைவர் தலைவியாகிய இருவரும் தோன்றினும் அவர் உயிரொன்றே. உயிரொன்றாக உள்ளம் உணர்வு குறிப்பு இன்பதுன்பம் யாவும் ஒன்றாகக் காணப்படுகின்றன. அதனையே ஒளவைப்பிராட்டியார் காதல் மனையாளும் காதலனும் மாறின்றித் தீதில் ஒரு கருமம் செய்பவே' என்றார். அதற்கு வமை கூறும்முகமாக கண்ணிரண்டும் 'ஒன்றே காண்' பதுபோல பரமபதியாகிய இறைவனுமாக பக்குவ ஆன்மாவாகிய தலைவியுமாக 'அன்பினால் இன்பமார்தல்' ஆகிய ஒன்றே கூடக்காண்கின்றான். மனநிறையாகிய தோழி அங்கே கடிமனம் அடிமையாகிறது. அதனால் மன நிறையாகிய தோழியே பின் ஆன்மாவாகிய தலைவியைப் பதியாகிய தலைவனோடு கூட்ட உபகாரமாகிறாள். அதனால்தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே! என்ற தத்துவார்த்தம் மாணிக்கவாசகர் முன்னிரு வரியுள்ளும் கொள்ள வைத்து அதற்கு ஏது ஈற்றடியிலே வைத்து அனுமான அளவை செய்து கண்ணினும் செவியினும் நுண்ணிதினுணர்ந்து கூறுகின்றதாக இப்பாசுரம் அருளிச்செய்யப்பட்டது.

வேறுதாரணங்கள் கூறுது காகத்தின் கண்ணுக்கு ஒன்றே மணி கலந்த உதாரணம் கூறப்போந்த ஏதுயாதெனின் கருங்கடற்பள்ளியுள் கலவி நீங்கிப் போய்ப் பிரிந்த இராமனும் சீதையும் மிதிலைக்காட்சியில் ஒருங்கிய இரண்டிற்கு உயிரொன்றாயினர். மீண்டு சதிபதிகளாகச் சோலை[illegible] கண்டுவரச் சென்[illegible]

## நற்சிந்தனை

வஞ்ச நெஞ்சினர்
காணு வள்ளலை
அஞ்செழுத் தோதி
அர்ச்சிப் போமே.

இந்திரன் மகனாகிய சயந்தகுமாரன் சீதையின் அழகைக் கண்டு மயங்கினான் அதனால் அவள் மெய்தீண்டி அடையும் ஊற்றின்பம் வேண்டிக் காகவடிவிற் சென்று சீதையைத் தீண்டினான், சீதையைத் தீண்டியமாத்திரத்தே இராமனுக்கு அவன் தீண்டி ஊற்றின்பம் பெற்றது புலனாயிற்று. எவ்வாறெனில சீதைக்கு அஃது துன்ப உணர்வு செய்ய அத்துன்ப உணர்வே இராமனுக்குத் தோன்ற ஒருயிர் ஈருடலாகிய அவ்விருவர்க்கும் ஒன்றாய் இன்ப துன்பம் வருதல் ஒரு தலையாதலின் சீதை உணர்வு இராமனுக்குப் புலனாயிற்று. இருவரும் "மாறிப்புக்கு இதயம் எய்தினர்" ஆதலின்.

அதனால் இராமனுணர்விற் சீதையைக் காகவடிவில் தீண்டியவன் சயந்தனே என்ற உணர்வு தோன்ற அங்கிருந்த தருப்பையை எடுத்து ஸ்ரீமந் நாராயண மந்திரத்தை ஓதி அவன்பால் ஏவினார். அது சயந்தனைத் தொடர்ந்தது. மூவுலகும் ஓடியும் அதற்கு எதிர் நிற்றலாற்றாது மீண்டும் இராமபிரான் பாதங்களில் வீழ்ந்து தன் தவற்றினை மன்னிக்க வேண்டினான். குணமெனும் குன்றேறி நின்ற இராமன் அகலிகையைப் பெண்ணுலகத்திற்கு உணர்வுண்டாக மன்னித்துப் பெண்ணுருவாக விட்டதுபோல, சயந்தனையும் ஆணுலகு உய்தற்காக மன்னித்து உயிரளவு நின்ற அஸ்திரமாகிய தருப்பையின் வேகததைக் கண்ணளவிற்போகச் சாப விமோசனம் அளித்தார்.

அன்று முதலாகக் காகத்திற்கு இரு கண்ணிற்குமணி ஒன்றேயாயிற்று. இவ்வுணர்விலிருந்து ஸ்ரீ இராமனுக்கும் சீதாதேவிக்கும் இன்ப துன்பங்கள் மானுடமாகிய காரணத்தால் ஒன்றாய் வந்ததுபோல இத்தலைவன் தலைவியர்க் கொன்றுதல் உணர வைத்தார்மணிவாசகர். மணிவாசகங்கள்நிறைந்த கோவையின் அகத்துறையும் அதனுட் காணும் உட்பொருளும் அதனுள் வடித்தெடுக்கப்படும் தத்துவ உண்மைகளும் ஒருங்கமைந்து "அணைந்தோர் தன்மை" ஆகிய சித்தாந்த மெய்ஞ்ஞான உணர்வு முழுமையும் அமைந்த செய்யுள் இறுதியாக அமைந்துள்ளது.

இன்னும் எடுத்துரைத்து [illegible]

([illegible] பக்கம்)

உ

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே.

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

## புனித அன்னையாரின் உபதேச[illegible]

ஸ்ரீ இராமகிருஷ்ணபரமகம்சருடைய தேவியாரான ஸ்ரீ சாரதாமணி அம்மையாரை ஆத்மீக ஞானியர் புனித அன்னையாரென்றே அறிவர். 1853 ம் ஆண்டு டிசம்பர்மாதம் 22-ந் திகதி ஏழைக்குடும்பத்திற் பிறந்த இவரை மக்களெல்லோரும் பொதுவாகப் பெண்களே போற்றி வணங்க வேண்டும்.

இவர் போதித்துள்ள உபதேசங்களைப் பெண்களாகிய நாம் நினைவுகூர்ந்து கடைப்பிடித்தொழுகல் வேண்டும். இப்படிச் செய்வோமாயின் நாம் ஈடிலாப்பேரானந்தம் எய்தமுடியும். இவ்வம்மையார் பெண்களுக்குச் செய்த உபதேசங்களிற் சில பின்வருமாறு:

பெண்கள் வெகு எளிதில் கோபத்திற்கு ஆளாதல் கூடாது. அவர்கள் பொறுமையைக் கடைப்பிடித்தல் வேண்டும். 'பெண்ணே மானிடப் பிறவியைப் பெற்ற நீ பெரும் பாக்கியசாலி. இறைவனிடம் தீவிர பக்திகொள். கடுமையாக உழை. பிரார்த்தனைக்கெனச் சிறிதுநேரத்தை ஒதுக்கிவை''.

ஒருமுறை ஒரு பெண் அன்னையாரை அணுகித் தன் மகள் திருமணம் செய்ய மறுப்பதாகவும் அவளுக்கு இல்லறப்பூணப் பணிக்குமாறும்வேண்ட அதற்கு அன்னை அளித்த பதிலாவது;

"வாழ்நாள் முழுவதும் ஒருவனுக்கு அடிமையாகி, எப்போதும் அவனது சொற்படி நடந்துகொண்டிருப்பது துன்பந்தரத்தக்கதல்லவா? துறவு வாழ்க்கை நடத்த விரும்பும் பெண்களையெல்லாம் [illegible] சரிய வாழ்வு நடத்துமாறு ஊக்க வேண்டும்."

அன்னையார், இல்லறத்தினுள் புகுந்தாலும் இல்லறத்தில் துறவறத்தை மேற்கொண்டு அதன் பயனை எமக்குச் செய்கைமூலம் புலப்படுத்தியதோடு இன்னும் இல்வாழ்க்கை வாழும் பெண்களுக்கும் உபதேசம் செய்துள்ளார்.

எவருடனும் மிகவும் நெருங்கிப் பழகாதே. குடும்பத்திலே பலர்கூடி நடாத்தும் கொண்டாட்டங்கள் எதிலும் அதிக அளவு பங்கெடுத்துக் கொள்ளாதே. எப்பொழுதும் அடக்கமாயிரு. பிறரைப்பற்றி அறிய ஆவல்கொள்ளாதே. தியானம், பிரார்த்தனை செய்யும் நேரத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக அதிகப்படுத்திக் கொள்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

செல்வி,
மனோன்மணி செல்லத்துரை
சங்கரத்தை, வட்டுக்கோட்டை

## தவத்தினர் காணும் சங்கரன்

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: உசேனி :: தாளம்: ஆதி

பல்லவி

எங்கும் நிறைந்தவனே வேலனே
இகபர சுகமருள் ஈஸ்வரி பாலனே. (எங்)

அனுபல்லவி

தங்கும் ஞானம் தருவாய் குருவாய்
தளருமென் நெஞ்சம் தளிர்த்திட வருவாய் (எங்)

சரணம்

பவத் தொடரறுக்கும் பரம சண்முகனே
பதமலர்த் தேனைப் பாலிக்கும் குகனே
தவத்தினர் காணும் சங்கரன் மகனே
சரசகோ பாலன் தருமரு மகனே. (எங்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சுபகிருது ௵ மாசி ௴
௧௭உ வெள்ளிக்கிழமை

## வாழ்க்கையைக் கலங்க வைக்கும் வரிகள்

இரண்டு மூன்று ஆண்டுக ளாக ஈழநாட்டின் பொருளாதார நிலைமை பெரும் மாறுதல் அடைந்து வரு[illegible]. இக்காரணமாகப் [illegible] மக்களின் பொருள் நிலைமையும் பாதிக்கப்படுகின்றது மயக்கமும் மர்மமுமே ஆட்சி அமைப்பிலும் நடைமுறையிலும் காணப்படுகின்றன. ஊன்றி ஆராயும்பொழுது மக்களின் வாழ்க்கை நிலைமை எவ்வளவு சீர்கெட்டிருக்கின்றதென்பது தெற்றெனப் புலப்படும். அவ்வாறெனின் ஆட்சிமுறை செம்மையானதா என்ற கேள்வி எழும் அல்லவா?

பொதுமக்கள் நியாய[illegible]வு அல்லலின்றி வா[illegible]வதற்கு நாட்டின் பொருள்நிலைமை பக்குவமாயமைதல் வேண்டும். ஆட்சி புரிகின்றவர்கள் நாட்டின் பொருள் வருவாய் போதியளவுக்கில்லாமையால் இடர்ப்படுகின்றனரென்றும், ஆகையால் வரிகள் பலவற்றை விதித்து நிதி பெருக்குகின்றார்கள் என்றும் விளக்கம் கூறப்படுகின்றது. வருவாய்க்குத் தக்கதாய்ச் செலவு செய்வதா, அன்றிச் செலவுக்கு வேண்டியளவு வருவாயைப் பெற முயற்சிப்பதா என்ற விசாரணையை நடத்தின் விவாதம் விரியும். ஆகவே இப்பொழுது மக்கள் செய்யக் கூடியதென்ன என்பதைமட்டும் இங்கு ஆராயவாம்.

பொதுமக்களின் எண்ணத்தை ஒருங்கு அமைத்து உற்ற வழியைத் தேடுவதே பாராளுமன்றத்தில் அங்கத்தவர்கள் பணி. நாட்டின் எண்ணம் என்ன என்று ஆராய்வது சுலபமான காரியமல்ல. பலவேறு கட்சிகளும் கொள்கை வேறுபாடுகளும் இருக்கின்ற வகையில் குறிப்பிட்ட எண்ணத்தை மக்கள் கொண்டிருக்கின்றனர் என்று கூறுவது பொருந்தாது. எனினும் பொதுவாக மக்கள் வாழ்வுக்கு இடையூறாகவுள்ளனவற்றையும் உதவியாயிருப்பனவற்றையும் வெவ்வேறாக அறிவது பாராளுமன்ற அங்கத்தவர்களின் கடமையாகும். சுதந்திரக்கட்சி ஆட்சி ஆரம்பமான காலம் தொடங்கி இந்நாட்டின் வரித்திட்டத்திலுல் மக்கள் பெரிதும் இன்னற்பட்டு வருகின்றனர் என்பதை மறுக்கமுடியாது. வரித்திட்டந்தான் என்ன என்று விளங்கமுடியாத நிலைமையில், அத்திட்டம் மக்களை மயங்க வைக்கின்றது. பொருளாதாரக் கல்விப் புலமையாளர்கூட இதனை விளக்கிக்கூற முடியாதவர்களாயிருக்கின்றனர். வருமானவரி முதல்முதலாக விதிக்கப்பட்ட காலத்தில் மக்களிடம் இருந்து ஒரே ஒரு வழியாக அரசநிதிக்கு உரிய பொருளைப்பெறும் வரியென்று விளக்கம் கூறப்பட்டது. அந்த அளவில் வரி கொடுப்போரும் ஆறுதலடைந்தனர் சென்ற சில ஆண்டுகளாக வருமானவரியுடன் பலவேறு வழிகளாக வரிகள் செலுத்தும் இடரில் மக்கள் இருக்கின்றனர்.

உழைப்பவர்கள் உரிய பங்கை அரசநிதிக்குதவ வேண்டும். அது நேர்மையான வரி. ஆனால் உழைப்பு என்பது என்ன? உழைப்புக்காகச் செய்யப்படும் செலவு நீக்கி எஞ்சியிருப்பதே வருவாய். அந்த வருவாய் என்ன என்பதைக் காண்பதற்கு ஆற்றலில்லாத அரசாங்கம் கண்டபடி வரிகளையிடுவது நெறியாகாது. ஒருவர் தனது உழைப்பையும் அவ்வுழைப்புக்காக விரயஞ் செய்ததையும் தான் கொடுக்கும் வரிகளின் தொகைவகைகளையும் ஒழுங்காகக் குறிப்பிட்டு ஆண்டுதோறும் புள்ளிவிபரங்களை ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும் இந்த நிலைமையை ஆட்சியாளர் அறிவதற்கு ஒவ்வொரு தொகுதியிலும் மக்கள் கூடிப் பாராளுமன்ற அங்கத்தவருக்குப் 'பொருளாதாரப் போக்கை விளங்க வைத்தல் அவசியம். வீண் விரயஞ் செய்து செலவு வகையில் இடம்பமாய் அரசு நடத்தும் அமைச்சர்கள் உண்மையை அறியும்படி மக்கள் தங்கள் நிலைமையை விரிவாக எடுத்துக் கூறுதல் மிகமிக அவசியம்.

—0—

# மக்களுக்காக வாழ்ந்த மகான்

## நாவலர் மண்டபத்தில் உருவப்படத் திரை நீக்கம்

"திருவாளர் அருளம்பலம் அவர்களை எனக்கு நன்றாகத் தெரியும். எனது நண்பர். உண்மையாகவே சமூகத்திற்கு உழைத்தவர். இவரது உருவப்படத்தைத் திறந்து வைப்பதினால் அன்னாரின் குடும்பத்திற்கோ அல்லது சைவபரிபாலன சபைக்கோ பெருமையல்ல, பிற்சந்ததியார் அவரைப் போலத் தொண்டாற்ற உறுதுணையாக இருக்கும் என உதவி மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் அவர்கள் திரு. அருளம்பலம் அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைக்கும்போது கூறினார்.

இவ்விழா 27-2-63-ல் சைவ பரிபாலன சபைத் தலைவரும் முடிக்குரிய நியாயவாதியுமாகிய திரு த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்களின் தலைமையில் மேற்படி சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.

"திருவாளர் அருளம்பலம் அவர்கள் சைவபரிபாலன சபைக் காரியதரிசியாகவும் யாழ். இந்துக் கல்லூரி அதிகாரசபையின் காரியதரிசியாகவும் இருந்தனர். இவர் கூட்டுறவுச் சமாசத்தின் முக்கிய பொறுப்பாளியாக இருந்து மக்களுக்காகத் தொண்டாற்றினர். இவர் ஐக்கிய தீபத்தின் ஆசிரியராகவும் கூட்டுறவு சமாசத்தின் காரியதரிசியாகவும் கடமையாற்றினர்' எனத் தலைவர் தனது முன்னுரையில் கூறினர்.

யாழ்- இந்துக் கல்லூரி உதவி அதிபர் திரு N. சபாரத்தினம் அவர்கள் பேசுகையில் 'வழக்கறிஞர் அருளம்பலம் அவர்கள் இவ்வுலகைவிட்டு நீங்கியது பெருங் குறையாகும். செல்வக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த இவர் ஏழை மக்களுக்காகப் பாடுபட்டார். இவர் ஒரு ஆசிரியராக வரவேண்டியவர். ஆனால் துரதிஷ்டவசமாக வழக்கறிஞராகக் கடமையாற்ற நேர்ந்தது".

முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கள் பேசுகையில் திருவாளர் அருளம்பலம் அவர்கள் தமக்காக வாழாது ஏழை மக்களுக்காகவும் சமயத்திற்காகவும் வாழ்ந்தவர். செல்வக்குடும்பத்தில் பிறந்த இவர் மேலும் மேலும் பொருள் சேர்க்க விரும்பாது மக்களுடைய பொருளாதாரம்- சேவை என்பவற்றைப் பெருக்குவதற்காக கூட்டுறவுச் சங்கத்தை விருத்தியடையச்செய்தார். சுயநல

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## திருவள்ளுவர் திருநாள்

**11—3—63**

எதிர் வரும் **11-3-63** மாசயுத்தரநாள் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனர் தெய்வீக மெய்திய திருநாளாகும். சிறப்பு மிகும் அந்த நன்னாளை திருவள்ளுவர் நினைவு தினமாகக் கொண்டாடும்படி தமிழ்மக்களைக் கேட்டுக்கொள்ளும் துண்டுப் பிரசுரங்கள் தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

நல்லைக்கீர்த்தனம் — 34.

## பாலமுருகன் எனக்குண்டு!

*

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : சிந்துபைரவி : தாளம் : ஆதி

கோலவிழி பன்னிரண்டு — அருள்
கொள்ளும் முகம் மூவிரண்டு
பால முருகன் எனக்குண்டு — அவன்
பரிந்தருள்வான் எனைக் கண்டு. 1.

நல்லைநகர் முருகேசன் — வள்ளி
நாயகிக் கின்ப வுல்லாசன்
தொல்லை வினைப்பாப நாசன் - என்றும்
தொண்டர்கள் போற்றிடும் நேசன் 2.

வன்ன மயிலேறும் வீரன் — கதிர்
வடிவேலன் சூர சங்காரன்
பொன்னணி பூணலங்காரன் — அன்பர்
புகலிடம் புகுமாதாரன் 3.

பாதமலர் தரும் முருகன் — அவன்
பரந்தாமனின் திருமருகன்
நாதன் அவனென்னிடம் வருவன் புவியில்
நல்ல வரங்களெல்லாம் தருவன். 4.

சண்முகன் என்னுயிர் நாதன் — சிவன்
சற்குருவாய் வந்த போதன்
என்முகம் பார்த்தருள் கீதன் — அவன்
என்றும் மறைபோற்றும் வேதன். 5.

திருவதிகை - மனவாசகங்கடந்தார்
அருளிச் செய்த

# உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் - 9)

### சிவ தத்துவங்களின் இயல்புகள்

சுத்தவித்தை ஞானமிகுந் தோன்மையா மீசுரந்தான்
அத்தன் தொழிலதிக மாக்கியிடும் — ஒத்தலிவை
சாதாக் கியமென்றுஞ் சத்தி சிவங்கிரியை
ஆதார ஞானவுரு வாம். 11.

கொ—கூ: சுத்தவித்தை ஞானம் மிகும், தொன்மையாம் ஈசுரம் அத்தன் தொழில் அதிகம் ஆக்கியிடும்; சதாசிவம் இவை ஒத்தலாம்; சத்தி என்றும் கிரியை (ஆம்); சிவம் ஆதார ஞானவுருவாம்.

ப—ரை: சுத்தவித்தை ஞானம் மிகும் - சுத்தவித்தையானது கிரியை குறைந்து ஞானம் கூடியதாய் அமைந்திருக்கும்; தொன்மையதாம் ஈசுரம்தான் அத்தன் தொழில் அதிகம் ஆக்கியிடும் - பழமையதாகிய ஈசுர (மகேசுர) தத்துவம ஞானம் குறைந்து கிரியை அதிகரித்ததாய் இருக்கும்; சாதாக்கியம் இவை ஒத்தல் ஆம் - சாதாக்கிய (சதாசிவ) தத்துவம் ஞானமும் கிரியையும ஒத்த அளவில் பொருந்தியிருப்பதாம்; சத்தி என்றும் கிரியை (ஆம்) - சத்தி (-விந்து) தத்துவம் எப்போதும் கிரியை உடையதாய் இருக்கும்; சிவம் ஆதார ஞானவுருவாம் - சிவ (நாத) தத்துவம் (யாவும் [illegible] பெறுவதற்கு ஆதாரமான ஞான உருவமாக இருக்கும்.

இந்தத் தத்துவங்களின் இயல்புகள் இன்னன மாதலைச் சிவஞானசித்தியாரில் "ஞானமேயான்போது" (சுபக்: சூத். 1 செய்: 65). "விதைதையோடீசர்" (சுபக்: சூத்: 1. செய்: 66) என்னும் தொடக்கத்துச் செய்யுள்களானுமறிக.

சுத்த தத்துவங்கள் ஐந்தும் அவற்றிலமைந்த ஆன்மாக்களுக்கு 'எல்லாவற்றையும் அறியுந்தன்மையையும், எல்லாவற்றையும் செய்பவனது தன்மையையும் தருதல் பற்றிச் சுத்ததத்துவம் எனவும், சுத்தாத்துவா எனவும்; அசுத்த தத்துவங்களைச் செலுத்துதல்பற்றிப் பிரேரகா காண்டம் எனவும் கூறப்படும், இவை ஐந்தும் சடமாயினும் சிற்சத்திக்குச் சுதந்திர வடிவங்களாதலால் சைதன்னியம் எனவும், ஏனைய முப்பத்தொன்றனுள் புருடதத்துவம் சார்ந்ததன் வண்ணமாதல்பற்றிச் சிதசித்து எனவும், அஃதொழிந்த முப்பதும் அசித்தெனவும் படும். (சித்தி: சூத், 2, செய்: 69 பார்க்க; பிரேரகம்- செலுத்துதல்; காணடம் - கூட்டம்; சைதன்னியம் - அறிவுடைமை; சித்து - அறிவுடையது; சித்து + அசித்து = சிதசித்து. அறிவுள்ளதும் இல்லதுமானது; அசித்து - அறிவற்றது).

இதுவரை கூறப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களோடும் ஆன்மா கூடி மயங்கிப் பெருந்துன்பத்தை

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத் தமிழ் அரசரும் தலைநகரும்

(முற்றொடர் - 3)

### செங்கடகநகரி

யாம் சில தடவை நேரடியாக வல்லிபுரத்துக்குச் சென்று ஆங்கு இயற்கையாக வாய்ந்துள்ள துறைமுக வசதியையும் அதன் புராதனத்தையும் மட்டிட்டுக்கொண்டோம், வண சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் "பெருங்கடற் சமீபமும், சிறந்த துறைமுகப் பொலிவுங் கொண்டது வல்லிபுரமே. ஆங்கு நற்றுறையுண்டோ என இராசநாயக முதலியார் கொண்ட ஐயுறவு எம்மால் இனிது தீர்க்கப்பட்டது. வல்லிபுரத்துக்கு நேரேயுள்ள கடலோரம் பண்டை நாட்டொட்டுக் குடாக்கரையென்றழைக்கப்படுவதையும் வெருகமுனைக்கும் கொட்டோடைக் குமிடைப்பட்ட வில்வளைவான அக்கரை ஓர் காலம் மிகச் சேமமான ஒதுங்கு குடாவாய்த் திகழ்ந்தமையையும் கரையிலேறபட்ட பழைய வாய்க்காலொன்று கொண்டுபோய் வீழ்த்திய மணற் குவியலால் அதன் வாயிற் களங்கமுண்டுபட்டமையையும் பண்டைக்காலத்தினும் இன்றைக்கும் மரக்கலங்கள் கச்சான் ஒதுக்கை நாடி அவ்வப்போது இக்குடாவில் நிறுத்தப்படுகின்றமையையும் யாம் நேரில் ஆராய்ந்து அறிந்துகொண்டோம்", (யா. வை. வி பக் 68) என்பதனாலும் இவ்வுண்மை அறிந்துகொள்க. இப் பத்தியுள் நாம் பேசியவாற்றால் உக்கிரசிங்கனால் அவன் காலத்தில் இச் 'செங்கடகநகர்' அமைக்கப்பட்டிருக்கலாங்கொல்லோ என்னும் ஐதீகம் உதயமாயிற்று.

இந்நகரின் காலம் யாது? சரித்திர ஆராய்ச்சியிலே அதுவும் ஒரு தலைநகரை நிச்சயிப்பதன்கண் காலம் மிக முக்கியம். 'செங்கடகநகர்' இன்ன ஆண்டு இன்ன திங்களில் கட்டப்பட்டதென்று காலத்தை வரைவாகக் காட்டுங் குறிப்புக்கள் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் கதிரமலையும் செங்கடகநகரியும் உக்கிரசிங்கனால் கட்டப்பட்டவைகள் என்பது வைபவமாலை சொல்லுங்கூற்றால்நிச்சயம் வைபவமாலை "சாலிவாகன சகாப்தம் 717ல் உக்கிரசிங்கன் கதிரைமலையில் இருந்து அரசாண்டு வந்தான்" (வை மாலை பக். 13) என்று சொல்லுவதால் அவ்வாண்டு கி. பி. 795-ம் ஆண்டாகி உத்தேசம் எட்டாம் நூற்றாண்டென்று தெரிகிறது. இவன் "வாலசிங்கராசனுக்கு முடிசூட்டி அரசனாக வைத்து மரணமடைந்தான்" (வை. ப. மா. பக். 23 என்று சொல்லப்படலாலும் "சோழநாட்டில் இருந்து இரண்டு கண்ணுங் குருடனாகிய கவி வீரராகவன் என்னும் யாழ்ப்பாணன் செங்கடகநகரியிலிருந்து அரசாட்சி செலுத்தும் வாலசிங்க மகாராசன்பேரில் பிரபந்தம் பாடிக்கொண்டுபோய் யாழ் வாசித்துப் பாடினான். அரசன் அதைக் கேட்டு மகா சந்தோஷமாய் அவனுக்குப் பரிசிலாக இலங்கையின் வட திசையிலுள்ள மணற்றிடல் என்னும் இந்நாட்டைக் கொடுத்தான்"

(வை. மா பக். 23, 24)என்று சொல்லப்படலாலும் உக்கிரசிங்கன், அவன் மகன் வாலசிங்கன், அவனைப்பாடிய கவி வீரராகவன் என்போரும் அக்காலத்திருந்த செங்கடகநகர் என்பதும் கி. பி. 8-ம் 9-ம் நூற்றாண்டைச் (8 அல்லது 9, அல்லது 8உம், 9உம்) சார்ந்த பொருள்கள் முடிபுகள் என்று தெரிகின்றன. இங்கு ஒன்று கவனிக்கத்தக்கது. மாருதப்புரவீகவல்லியம் சோழநாட்டவள், அக்கவிவீரராகவனும் சோழநாட்டான் என்பதே. இராகவன் என்னும் பெயர்பெற்றயாழ்ப்பாணன் எக்கவியையும் தானே இயற்றிப் பாடுதலில் வல்லமையுடையனாய் இருந்தமையாலே கவிவீரராகவன் என்று அழைக்கப்பட்டான் இவன் மனதிலே நினைக்கிறவைகளையும் சொல்லவல்லவன் மர்மமாக நடக்கும் காரியங்களையும் சொல்லவல்லவன். இவன் நாடெங்கணும் சென்று மன்னர் பிரபுக்களைப் பங்குவமும் பாங்கும் அறிந்து பாடிப் பரிசில் பெறுவதையே வழக்கமாகக் கொண்டவன். இவன் ஆராய்ச்சிக்கு அகப்படாத அரசரோ பிரபுக்களோ இல்லை என்னலாம். இவன் சோழநாட்டவன் ஆதலாலும், செங்கடகநகரியிலாட்சி செய்யும் வாலசிங்கன் சோழ இராசகுமாரத்தியின் மகன் ஆதலாலும், இம்மன்னனை அவன் நன்கு கேள்வி அளவான் அறிந்தவன் ஆகவேண்டும். தம் தாய்நாட்டவன் என்றமித்திர பாந்துவத்தினாலே இம்மன்னன் பேரிலே பிரபந்தம் பாடித் தான் அரங்கேற்றுங்கால் தன்னைத் தக்கவாறு சன்மானித்துப் பரிசிலளிப்பான் என்று இக்கவிஞன் நீண்டநாள் எண்ணமிட்டிருக்க வேண்டும்.

—தொடரும்,

பண்டிதர் பொ. ஜகந்நாதன்

### சீலையிலும் சிங்களமா ...?



பெரியவர்: 'ஐக்கிய மொத்த வியாபார நிலைய சீலை உறை விளம்பரம் சிங்களத்தில் இருக்கின்றதாமே.

விகடம்: சிங்களம் பரப்புதல் ஒரு மொத்தவியாபாரந்தானே அதற்கு ஐக்கியகாரர் திறமைசாலிகள் போலும்!

# உண்மை விளக்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அநுபவித்தும், தூல சரீரம் அழியுங்காலத்துக் கலை முதலிய தத்துவங்களாலாகிய சூக்கும சரீரத்தைப் பொருந்திச் சென்று சுவர்க்கம் நரகம் முதலிய இடங்களில் பூதாசாரம் பூதம் முதலிய சரீரங்களை எடுத்து வினைப்பயன்களை அநுபவித்துக் கழித்து, மேலும் இப் பூமியில் வந்து பிறக்கும். இவ்வுண்மையைச் சிவப்பிரகாசம் 46-ம் செய்யுளானறிக.

பொழிப்பு: சுத்தவித்தை ஞானமேறிக் கிரியை குறைந்தும், ஈசுரம் கிரியை ஏறி ஞானங்குறைந்தும், சாதாக்கியம் ஞானம் கிரியை இரண்டும் ஒத்த அளவிற் பொருந்தியும் இருக்கும் இயல்பின, சத்தி என்றும் கிரியையை உடையதாயிருப்பது, சிவம் ஞானவுருவாம் இயல்பினது.

—தொடரும்

இவ்வாரம் 3-3-63 — 9-3-63

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

நண்பர், சுற்றத்தவருடன் மோதல் தொடரும். கோள் சொல்வோர்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். புதிய முயற்சிகள் தடங்கல்படும். ஆனால் வெற்றி பெறும். பண இலாபம் நிச்சயம். புது முயற்சிகளில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

வழமையிலும் அதிக வேலையும் ஏற்ற பலனும், வியாழனிலிருந்து பெரும் முன்னேற்றமும் ஏற்படும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

நன்மாற்றல் ஏற்படலாம் புதிய முயற்சிகளில் நல்விளைவும், அதிக வேலையும், மன அமைதி இன்மையும் ஏற்படும்,

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்

உமது அலுவல்களில் நிச்சயமான முன்னேற்றமும், சில பிரச்சினைகள் தீர்வுறுதலும், வார முற்பாதிப்பகுதியில் தொல்லைகளும் உண்டாம்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

உமது அலுவல்களில் சில எதிர்ப்புகளும். இனசனத்தால் தொல்லையும், சிறு உடல்நிலைக்குழப்பங்களும், எதிரிகளை வெற்றி கொள்ளலும் ஏற்படும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

எதிர்ப்புகள் கரைந்துவிடும் நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். பழைய முதலீடுகளில் பெரும் இலாபமும், குடும்ப அமைதியும் நிச்சயம்,

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

முதல் நாளை எச்சரிக்கையாகக் கழிக்குக. பண இலாபங்கள் நிச்சயம். உமது சுதந்திரம் கீழ்மைப் பட்டிருக்கக் காண்பீர்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

ஞாயிறு மாலை, திங்கள், செவ்வாய் எச்சரிக்கையோடு கழிபட வேண்டும், மிகுதி நாட்கள் ஏற்றவை. பண இலாபம் நிச்சயம் தந்தையார் உறவு பாதிக்கப்படும்

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

ஓரளவு நல்ல வாரம். புதன் வியாழன் வெள்ளிகாலை தொல்லை நிறைந்தவை. வெள்ளி மாலையும், சனியும் நல்ல முடிவுகளைக் கொண்டுவரும்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

தொல்லையான வாரம். மனக்கவலை குடும்பத்தகராறு உண்டாகும். வெள்ளி மாலை சனி எச்சரிகையோடு கழிய வேண்டும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

நல்ல வாரம். சாதனைகளில் வெற்றியும், புது முயற்சிகளில் வியாழனிலிருந்து நல்ல முடிவும் பெரும் முன்னேற்றமும் நிச்சயம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

உடல்நிலைத் திருப்தியீனம், தொழில் வெற்றி, புகழ், ஆபத்தில் நண்பரின் பேருதவி உண்டாம்.

## திருக்கோவையார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊடல் தீர்த்தல்' ஆகிய துறையின் தோழி கூற்றாக அமைந்த பாசுரம் விளங்குகின்றது.

காரணி கற்பகம் கற்பவர்
நற்றுணை பாணர் ஒக்கல்
சீரணி சிந்தாமணி அணிதில்லைச் சிவன் கழற்கே தாரணி
கொன்றையன் தக்கோர்தம்
சங்கநிதி விதிசேர் ஊருணி
உற்றவர்க்கு ஊரன் மற்று
யாவர்க்கு ஊதியமே.

என்பது அப் பாசுரம்.

இதன்கண் கூறப்படும் தலைவன் ஐந்திணை யொழுக்கத்துத் தலைசிறந்தவன் என்பதும் அதற்கு நிலைக்களனாகவுள்ள ஐந்து நிலங்களிலுமுள்ள மக்களில் சிறந்த இலக்கியத் தலைவன் என்பதும் போதரக் கூறப்படுதல் நோக்குவார்க்குப் புலனாகும். கார் அணி கற்பகம் கூறப்படுதலினால் குறிஞ்சியும் பாணர் ஒக்கல் என்ற சார்பினால் பாலையும் கொன்றை கூறுதலால் முல்லையும் சங்கநிதி குறித்தலின் நெய்தலும் ஊரன் என்ற பெயரினால் தலைவன் சுட்டப்படுதலின மருதமும் ஆகிய ஐவகை நிலனும் சுட்டப்படுதல காண்க.

காரணி கற்பகம் என்றும் சீரணி சிந்தாமணி என்றும் குறித்தமையின் வானுலகத்துக்கும், சங்கநிதிபதுமநிதி இரண்டும் ஊருணியும் குறிக்கப் படுதலின் பூவுலகத்துக்கும் தலைவனாகிய தன்மையும், நட்புப் பகை நொதுமலின்றி யாவரும் மகிழ்ந்து பாராட்டுந் தகைமை உடையனாதலின் யாவர்க்கும் ஊதியம் ஆகிய தன்மையும் கூறி உலகத்தவர்கள் போலல்லாது புலனெறி வழக்கத்து உயர்ந்த தலைவனாக அகப் பொருள் நுதலிக கூறினாராயினும் அதனுள் மணிவாசகப்பெருமான் அநுபவித்த அருள்நிலையினை அமைத்துக் காட்டிய இவ்விறைவனது சீரை...

சிலை நயந்து,
சுடர்பொற்குன்றைத்
தோளாமுத்தை வாளா
தொழும் புகந்து
கடைபட்டேனை ஆண்டு
கொண்டிக கருணாலயனை
கருமால் பிரமன்
தடைபட்டின்னும் சாரமாட்டார்
தன்னைத்தந்த என்னாருமுதைப்
புடைப்பட்டிருந்து காண்ப
தென்றோ என் பொல்லாமணி
யைப் புணர்ந்தே.

என்று ஏங்கி உருகி நின்ற தன்மையும், அவ்விறைவன்

தொடர்ச்சி 4-ம் பக்கம்)

கச்சியப்பசிவாசாரியார்

## குருபூசை

நாள்: சுபகிருது ஹூ மாசி மீ ௨௰ உ (4-3-63) திங்கட்கிழமை.

இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:

இரவு 7 மணி ஆரம்பம்
கடவுள் வழிபாடு
தமிழ்மறையோதல்
ஸ்ரீமத். தி. கலியாணசுந்தரக் குருக்கள்

உபந்நியாசம்:
'கச்சியப்பசிவாசாரியார்'
பண்டிதர், பிரம்மஸ்ரீ. வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்கள்
"புராணங்கள்"
சைவப்புலவர், வ. கந்தசாமி அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம் 1-3-63.

## மக்களுக்காக ... ...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

மற்றவர் பொதுநலத்திற்காக அரசியலிலும் ஈடுபடாது வாழ்ந்தவர்.

முன்னைநாள் உதவி அரசாங்க அதிபர் ஆ செட்சணா மூர்த்தி அவர்கள் பேசுகையில் திருவாளர் அருளம்பலம் அவர்கள் தனது நண்பர் எனவும் சைவ சமயத்திற்கு உழைத்த சீலன் எனவும் தமிழ் மக்கள்படும் கஷ்டத்தையும், அவர்களிடம் இருக்கும் ஒற்றுமையின்மை பொறாமை முதலிய இழி குணங்களையும் கண்டு கண்ணீர்விட்டார். இவர் திரும்பவும் இவ்வுலகில் பிறப்பார். இதே குடும்பத்தில் இதே நிலையில் பிறக்கும் இவர் ஒரு அரசியல்வாதியாகத் திகழ்வார் என்பதில் ஐயம் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

திரு. வி. வீரசிங்கம் திரு. மு. மயில்வாகனம் ஆகியோரும் பேசினர்.

—O—

## பெற்றோர் சங்க அங்குரார்ப்பணம்

தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி, பொருளியல், எதிர்கால வாழ்வு முதலியவற்றிற்கு வேண்டிய திட்டங்கள் கருக்கொள்ளும் கட்டுக்கோப்பானவோர் உறைவிடமாகவும் ஏகோபித்த குரலாகவும் இயங்கக்கூடிய ஸ்தாபனமொன்றை உருவாக்கும்முகமாக யாழ் நகர மண்டபத்தில் இன்று அங்குரார்ப்பணஞ்செய்யவிருக்கும் இக் கூட்டத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன், ஈழநாடு ஆசிரியர் K. P. கரன் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாகில் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை

என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

**S. கனகசபை**

சிறுப்பர்.

...ed. 14.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

1. விளானை காரைநகர், சிதம்பரப்பிள்ளை சண்முகம் கைம்பெண் தங்கம்மா.
2. ஷையூர் சிதம்பரப்பிள்ளை சண்முகம் கனகரெத்தினம்
—வழக்காளிகள்.

இல, MB-4022.

எதிராக:

காங்கேசன்துறை ரேட் சுண்ணாகம், குருசாமி செட்டியார் நாகலிங்கம் செட்டியார் —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB-4022 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக்காணிகள் 1963-ம்ஹூ பங்குனிமீ 23-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா: 12,000-மும் ரூபா: 10,000-க்கு 17-5-61 தொடக்கம் 5-10-62வரை 10வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா: 305-02 சதம். இதில் ரூபா: 225-கொடுபட்டது,

காணிகளின் விபரம்:

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிந்பற்று சண்ணாகம் இறை "கொட்டியாபுலம்" பர. நீ. இல. ஏழு குளி பதினாலரை (பர. நீ. இல. 7 குளி $14\frac{1}{2}$) மேலும் குளி ஆறு (6 குளி) மொத்தம் பர, நீ. இல. எட்டு குளி இரண்டரை (பர. நீ. 8 குளி $2\frac{1}{2}$) கிணறும் தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப்பாகமும் கடைக் கட்டிடங்களும் எல்லைகிழக்கு கனகசபை ஆனந்தமூர்த்திக்குரியவாதனம், வடக்கு சிவனாண்டி செட்டி இரத்தினம் செட்டிக்கும் கந்தசாமி பெண் சரஸ்வதிக்குமுரிய வாதனங்கள், மேற்கு கீழே விபரிக்கப்படும் ஆதனமும் ஈட்டுக் கடன்காரனும், ஒழுங்கை முகப்பும் தெற்கு கிறிஸ்தோ வரப்பிரகாசத்திற்கும் அருளம்பலம் பெண் வள்ளிப்பிள்ளைக்குமுரிய வாதனங்கள். இதடங்கலிற் சொரியலாய்ப் பர. நீ. இல. நாலு குளி மூன்றேகால் (பர, நீ, இல, 4 குளி $3\frac{1}{4}$).

2. ஷை இறை "கொட்டியாபுலம்" பத்துடன் பதினறில் பதினைந்து குளி (10 15/16 குளி) சேமிப்பு வீடுகளும் வான்பயிர்

தாளர்கட்குரிய வாதனமும். ஊளமும். இடங்களும்.

2. ஷை நீர்வேலியிறை "வெட்டுக்குளம் தந்தியாவயலும் தந்திராய் வயலும்" அதற்குள்ளிருக்கும் கிணறும் பர. நெ. இல பதினாலு (பர. நெ இல $1\frac{1}{4}$) இக்காணியின் மேற்கெல்லைக் காணியின் வடக்கெல்லைக் கிணற்றில் பாவிப்புரித்தும் வழமையான வழிவாய்க்காலுரித்தும். எல்லைகிழக்கு சதாசிவம் பெண் வள்ளிப்பிள்ளைக்குரியவாதனமும். கதிரவேலு கந்தையாவிற்குரிய வாதனமும், வடக்கு வேலுப்பிள்ளை அருணசலத்திற்கும் கந்தையா கைம்பெண் முத்துப்பிள்ளைக்குமுரிய வாதனங்கள், மேற்கு அத்தியார் அருணாசலத்திற்கும் துரையப்பா கைம்பெண் அன்னபூரணத்திற்குமுரியவாதனம், தெற்கு வடிவேலு கைம்பெண் சின்னப்பிள்ளைககுரியவாதனம். இதடங்கலும்.

3. ஷை நீர்வேலியிறை 'வெட்டுக்குளம்' பர. நெ. இல. எட்டு குழி ஐந்து பர. நெ. இல, 8 குளி 5) தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப் பாகமும் எல்லை கிழக்கு அருணாசலம் பெண் தங்கமுத்துவிற்குரியவாதனம். வடக்கு வல்லிபுரம் பெண் சின்னச்சிக்குரியவாதனம். மேற்கும் தெற்கும் அத்தியார் அருணாசலத்திற்குரியவாதனம், இதடங்கலும். தெற்கெல்லையருகாக மேற்கெல்லைக்காணிக்குப் போகும் உரித்தும் அப்பாதையால் வழிவாய்க்காலுரித்தும் மேற்கெல்லைக் காணியின் தெற்கெல்லையருகாகவிருக்கும் 4 அடிப் பாதையால் ரேட்டிலிருந்து இக்காணிக்குப் போக்குவரவு செய்யுமுரித்தும்.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
1963ம்ஹூ மாசிமீ 21ம் திகதி,
காரைநகர்,
M. 270 1-3-63.

### விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 5812-ம் இலக்க வழக்கில் 1963-ம்ஆ தைமீ 30-ம்உ யைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1963-ம்ஆ சித்திரைமீ 8-ம்உ திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பின்னற்காணும் ஆதனடாப்பின் ஒழுங்கின்படி என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

விபரம்:

புலோலி மேற்கு
1, கிரிஷ்ணபிள்ளை மயில்வாகனம்
2. பெண் வள்ளிப்பிள்ளை
—வழக்காளிகள்.

எதிராக

பருத்தித்துறை
1, விநாயகமூர்த்தி மயில்வாகனம்
2. பெண் சிவபாக்கியம்
புலோலி கிழக்கு
3. கனகசபை நாகராசா
4, பெண் மகேஸ்வரி
—எதிராளிகள்.

அறவிடவேண்டிய
தொகையின் விபரம்:

தீர்வைத்தொகை:- ரூபா 6990, 24-7-57 தொடக்கம் 31-10-57 வரைக்கும் ரூபா 4000-க்கு 9 வீத வட்டி ரூபா 90, 1-11-57 தொடக்கம் 30-1-63 வரைக்கும் 5 வீத வட்டி ரூபா 1884. கோட்டுச் செலவு ரூபா 327-25. மேலதிக மூத்திரை ரூபா: 36, மொத்தம் ரூபா 9257-25. வட்டியால் கொடுபட்ட ரூபா 1115 நீக்கி மிகுதி ரூபா 8172-25,

ஆதனடாப்பு:

1. பருத்தித்துறை வென்றி வீரவாகுதேவன் குறிச்சியிறை மாகாளிதேவன்சீமா, கி.ப, 57/8, ஷை வீடு 1, தோட்டம் 1, வீடு 1. இவைகளில் மேற்குப்புறமாக கில. பர. $2\frac{3}{4}$. இதி உலாந்தாக, வேல்முருகுவால் 1773-ம் இலக்கத்தில் வீந்தாரிக்கப்பட்டு நொதாரிசு க. கிருஷ்ணபிள்ளையால் 1941-ம்ஆ சித்திரைமீ 24-ம்உ அத்தாட்சிப்படுத்தப்பட்ட 4116ம் இலக்கப் பிரிவிடல் உறுதியோடு அணைபட்ட படத்தின்படி கி.பர.2 குளி 17. இதில் 2-ம் துண்டுக்கு கி. பர, 1 குளி 1. கல்வீடு அடுக்களை கொட்டில்கள் இன்னும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கும் மேற்கும் தெற்கும் ஒழுங்கை. வடக்கு 1-ம்

களும். எல்லை கிழக்கு மேலே சொல்லப்பட்ட ஆதனம், வடக்கு ஈட்டுக் கடன்காரனுக்குரியவாதனம், மேற்கு ரேட்டு, தெற்கு ஒழுங்கை. இதடங்கலும் இதற்குரியவைகளும்.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்
1963-ம்ஹூ மாசி மீ 6-ம்உ
காரைநகர்,
M, 269, 1-3-63,

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

புத்தூர் மேற்கு மாரிமுத்து கந்தையா —வழக்காளி,

எதிராக

இல. M B 368

நீர்வேலி தெற்கு நீர்வேலி அத்தியார் அருணசலம் —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 368 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1963 ம் ஹூ சித்திரை மீ முதலாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் முறையே அந்தந்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 5228-38 சதம். இதில்ரூபா 420 நீக்கி மிகுதியும் ரூபா 3500க்கு 21-7-55 தொடக்கம் 20.9-55 வரை 8 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 252-22 சதம். மேலும் மூத்திரைச்செலவு ரூபா 42-60 சதம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை "தந்திராயும் தந்தியாவயலும்" பர. நீ. இல. இருபத்தொன்றரை (பர. நீ. இல $21\frac{1}{2}$) எல்லை கிழக்கு குளமும் வேலுப்பிள்ளை கதிரேசுவிற்கும் மறுபேர்கட்குமுரிய வாதனமும். ஈட்டுக்கடன்காரனுக்குரியவாதனமும். சுந்தரம் சிவசப்புவிற்குரியவாதனமும். கந்தையா சண்முகசுந்தரத்திற்கும் மறுபேர்கட்குமுரியவாதனமும். சின்னவி கணபதிக்கும் மறுபேர்கட்குமுரிய வாதனமும். வடக்கு கந்தையா சண்முகசுந்தரத்திற்கும் மறுபேர்கட்குமுரியவாதனமும். துரையப்பா கைம்பெண் அன்னபூரணத்திற்குரியவாதனமும். மேற்கு சின்னையா விசுவலிங்கத்திற்குரிய வாதனமும். செல்லையா கைம்பெண் சின்னத்தங்கத்திற்குரிய வாதனமும், ஈட்டுக் கடன்காரனுக்குரிய வாதனமும். சிதம்பரப்பிள்ளை கதிரவேலுவிற்குரியவாதனமும், தெற்கு வல்லிபுரம் கைம்பெண் ஆச்சிக்குட்டியின் உரித்

துண்டும் சொல்லப்பட்ட படத்தில் 4 என்று அடையாளமிட்ட ஒழுங்கை முகப்பும். இவ்வெல்லைகுட்பட்டவை முழுவதும் 3-ம் துண்டுக்குள்ளிருக்கும் கிணற்றிலும் அதற்குச் சேர்ந்தவைகளிலும் இதற்குரிய பங்கும் 4-ம் துண்டாகிய அடையாளமிட்ட வழி உரித்தும்,

2. பருத்தித்துறை மழவராயகுறிச்சியிறை. கோம்பை கலட்டி கில. பர. $14\frac{3}{4}$. இதுவும் பருத்தித்துறை சிங்கபாகுதேவன் குறிச்சியிறை, திண்ணகலட்டி கில. பர $9\frac{1}{8}$-ம் ஒரே துண்டாயிருக்கிறது இது 1922-ம் ஆ பங்குனி மீ 27-ம்உ நொத்தாரிசு க. சுப்பிரமணியத்தால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 10905-ம் இலக்கப் பிரிவிடல் உறுதியோடு அணைபட்டிருக்கும் படத்தின்படி கில பர. 25, குளி 3 26/32. இதில் 1-ம் துண்டுக்கு கில. பர. 4 குளி 8 13/32. இதில் கிழக்குப் புறமாக 1/3 பங்குக்கு கில. பர. 1 குளி 8 77/96. பனைகளும் எல்லை கிழக்கு 2-ம் துண்டு, வடக்கு ஒழுங்கை, மேற்கு நல்லதம்பி பெண் சின்னத்தங்கச்சிக்குடைய ஆதனம், தெற்கு சோமசுந்தரம் சரவணமுத்துவுக்குடைய ஆதனம், இவ்வெல்லைகுட்பட்டவை முழுவதும்.

S. C. Kanagasabai
கொம்மிஷனர்
[illegible] 24-2-1963
M. 271 1-3-63

# சிவராத்திரி விழா

### கொழும்பு முகத்துவாரத்தில்

முகத்துவாரம் ஸ்ரீமத். அருணாசலேஸ்வர சுவாமி கோவிலில், சென்ற வெள்ளிக்கிழமை 22-2-63 மாலை 6 மணி தொடக்கம் வட கொழும்பு இந்துபரிபாலன சங்க ஆதரவில் சிவராத்திரி விழா அச்சங்கத்தலைவர் திரு வை. முத்துக்குமாரசுவாமி அவர்கள் தலைமையில் மிக விமரிசையாக நடைபெற்றது

இவ்விழாவில் திரு சு பாலசிங்கம் அவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும், செல்வி மஞ்சுளா சத்திய வாகீஸ்வர ஐயரின் பத்திப்பாடல்களும் வைத்தியகலாநிதி த. நல்லநாதன் அவர்களின் சொற்பொழிவும், சிறுவர்கள் வீ. சுரேந்திரன், வீ. ரவீந்திரன் அவர்களின் புல்லாங்குழல் வாசிப்பும், திருவாளர்கள் பரம் தில்லைராஜா, அ வேல்சாமி, வீ சிவராசா ஆகியோரின் இன்னிசைப் பாடல்களும், "கதாகாலக்ஷேபமணி" ஐா. பொன்னம்பலம் அவர்களின் 'திலகவதியார்' என்னும் பொருள்பற்றிய சங்கீதக் கதாப்பிரசங்கமும் இடம் பெற்றன. அதன்பின் சுவாமி சமுத்திர தீர்த்தில் அம்பிகா சமேதராய்ப் பக்தகோடிகளுடன் தீர்த்தமாடித் திரும்பிய பின்னர் பிரசாதங்கள் வழங்கப்பட்டு விழா முடிவுற்றது.

X X X

### சாந்தையர்மடத்தில்

22-2-63 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிமுதல் சாந்தையர்மடம் ஸ்ரீ. கற்பகவிநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி விழா நடைபெற்றது. ஆசிரியர் திரு. க. முருகேசு, பண்டிதர் பொ. ஜெகந்நாதன், சைவப் புலவர் திரு வ கந்தசாமி ஆகியோர் உபந்நியாசம் செய்தார்கள்.

—

### திருக்கோவையார்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் காட்சிதந்தபோது கண்ட அற்புதத்தையும்,

முத்துமாமணி மாணிக்க வைரத்த
பவழத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரிற்
கூடிய அதிசயங்கள் கண்டாமே.

என் மெய்யடியாருள்ளே கூடி அவனருளே கண்ணாக்கண்டு உற்ற பேரின்ப வெள்ளம் பெருமையை எல்லாம் சுட்டி யாவர்க்கும் ஊதியமாக உள்ளாமென்று காட்டி உலகினை அழைக்கின்றார்.

"முழுதலகும் தருவான் கொடை நீர் சென்று முந்துமினே" என்று உலக மக்களை அறைகூவி அழைக்கும் பாணியில யாவர்க்கும் ஊதியமானவனுதலின் அவன் அன்பையே பற்றுமாறு உலகுய்யக் கூறிக் கோவையில் உயர்வுபெற்ற திருக்கோவையைப் பூர்த்தி செய்து திருச்சிற்றம்பலமுடைய அழகிய ஆட்டுகந்த இறைவன் ஞானநடத்திற்கலந்து மகிழ்கின்றார் மாணிக்கவாசகர்.

அவரது கருணை உலக மக்களை உய்விக்க என்றே நின்றமை யாவர்க்கும் ஊதியம் என்பது கூறி உணர வைத்தார்.

'கள்ளத்தலைவர்
துயர்கருதித் தங்கருணை
வெள்ளத்தலைவர் மிக'
(திருவருட்பயன்)

—

### புனித அன்னை ......

1-ம் பக்கத் தொடர்ச்சி

மேலும் இவர் பெண்களை நோக்கிக்கூறியதாவது; எந்த மானுடப்பிறவியை நீ நேசித்தாலும், அதற்காக வருந்தத்தான் நேரிடும். எவன் இறைவன் ஒருவனிடம் மட்டுமே அன்பு செலுத்துகிறானோ, அவனே உண்மையில் பாக்கியசாலி. கடவுளை நேசிப்பதால் எவ்விதத்துன்பமும் ஏற்படுவதில்லை.

இப்படிப் பெண்குலத்தின் முன்னேற்றத்தின் பொருட்டு இவர் உபதேசித்தவற்றைப் பெண்களாகிய நாம் நினைவு கூர்ந்து பின்பற்றுவோமாயின் நாமெல்லோரும் நிச்சயமாக நம் வாழ்க்கையில் வெற்றியைக் காணமுடியுமென்பதிற் சிறிதேனும் சந்தேகமில்லை.

—:—

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 1-3-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org